மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் , காரியாபட்டி,

**முன்னிலை : திரு.க.யோகேஷ்வரன், B.A., L.L.B,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

காரியாபட்டி

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை மனு எண்.5/2026**

IN

**அசல் வழக்கு எண். 87/2024**

பேச்சியம்மாள் ...... மனுதாரர் வாதி

/எதிர்/

பாண்டியராஜன் .... எதிர்மனுதார்/பிரதிவாதி

இம்மனுவானது 23.01.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்னர் 13.03.2026 வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில், கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஜி.மாரியப்பன் அவர்களும், எதிர்மனுதாரர் /பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்களும் முன்னிலையாகி செய்து கொண்ட இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1. உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் ஆர்டர் 13 ரூல் 1, 2 மற்றும் பிரிவு 151 ன்–படி மனுவில் கண்ட ஆவணங்களை சரியான நேரத்தில் தாக்கல் செய்யாத தவறுதலையும் தாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

**2. மனுதாரர்கள் மனுவின் சுருக்கம்:–**

2(1). மனுதாரர்/வாதி தரப்பில், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கில் வாதி தரப்பினை நிரூபிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்கள் ஆகும். மேற்படி

ஆவணங்களை தாக்கல் செய்யாமல் போனது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல. தெய்வாதீனமானதாகும். மேலும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்தில் வாதி செய்து வரும் விவசாயத்திற்கு கிராம நிர்வாக அலுவலர்களால் வழங்கப்பட்டதாகும். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் போனால் அது மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படக்கூடும். எனவே, மனுவில் கண்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல்.

3. <u>எதிர்மனுதார் / பிரதிவாதி தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

3(1). எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலாது. அசல் வழக்கினை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதார்/வாதியின் மனுவை எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது.

4. <u>தீர்வு காணவேண்டிய பிரச்சனை:–</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

<u>5.தீர்வு முடிவு:–</u>

5(1). மனு, எதிருரை, வாதுரை, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன இருதரப்பு வாதங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன.

5(2). மனுதாரர் /வாதி தரப்பில், மனுவில் கண்டுள்ள ஆவணங்கள் அசல் வழக்கில் வாதி தரப்பினை நிரூபிக்கக்கூடிய முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் போனது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமானதாகும் என்றும் மேலும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்தில் வாதி செய்து வரும் விவசாயத்திற்கு கிராம நிர்வாக அலுவலர்களால் வழங்கப்பட்டதாகும் என்று கூறியுள்ளார்.

5(3). எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில், மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலாது. அசல் வழக்கினை இழுதடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்று கூறியுள்ளார்.

5(4). இரு தரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலிக்கையில் மனுதாரர் அசல் வழக்கானது எழுவினா வனையப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் உள்ள நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் மனுவில் கண்டுள்ள ஆவணங்களை தனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்ய அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் இருதரப்பையும் முழுமையாக விசாரித்து இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களின் அடிப்படையில் மட்டுமே வழக்கின் உண்மை தன்மை நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதாலும் தரப்பினர்களுக்கிடையேயுள்ள பிரச்சனை குறித்து முழுமையான மற்றும் இறுதியான முடிவை இரு தரப்பையும் விசாரித்து ஆவணங்கள் மூலம் எட்ட முடியும் என்பதாலும் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் மனுதாரர்/வாதிக்கு தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு வேண்டிய ஆவணம் என்பதாலும், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்து கொள்ள அனுமதி வழங்குவது ஏற்கதக்கதாக உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்படி மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் தாவா வழக்கு சொத்திற்கு சம்மந்தம் உள்ளதா? இல்லையா? ஆகியவற்றையும், ஆவணங்களின் செல்லும்தன்மை மற்றும் தொடர்புடைமை குறித்தும் அத்தகைய ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்யும்போது ஆட்சேபனை தெரிவிக்க எதிர்மனுதாரர் /பிரதிவாதிக்கு வாய்ப்பு இருக்கிறது. வழக்குகள் அனைத்தும் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது பொதுவான விதி. அந்த விதிக்கிணங்க மனுதாரர்/வாதிக்கு தனது தரப்பு சாட்சியங்களை முன்னிறுத்த மனுதாரர்/ வாதிக்கு ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/ பிரதிவாதிக்கு அநீதி ஏதும் விளைவிக்கப் படமாட்டாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை குறித்து உத்தரவு இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்.</u>**

இல்லை.

YOGESHWARAN G Digitally signed by YOGESHWARAN G

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
காரியாபட்டி.

மா.உ.ம.நீ.ந.நீ. காரியாபட்டி,
IA.No. 05/2026
in
O.S.No. 87/2024
உத்தரவு
நாள். 16.3.2026